செ.வெ.எண்:41 நாள்:17.11.2021

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**தடுப்பூசி போட்டுக் கொள்ளாத மக்களுக்கு – மாவட்ட ஆட்சியர் அழைப்பு**

**20,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதை இலக்காக கொண்டு 18.11.2021 மற்றும் 21.11.2021 ஆகிய நாட்களில் நாகப்பட்டினம் முழுவதும் "மெகா தடுப்பூசி முகாம்" நடைபெறும்.**

தமிழ்நாடு முழுவதும் கோவிட் - 19 கொரோனா பெருந்தொற்று பரவலை முழுமையான வகையில் கட்டுபடுத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி **"மெகா தடுப்பூசி முகாம்"** நடத்தப்பட்டு வருகிறது.

கொரோனா பெருந்தொற்றினை கட்டுப்படுத்திட தமிழக அரசு பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**கொரோனா பெருந்தொற்று நோயிலிருந்து பாதுகாத்துக் கெள்ள தடுப்பூசி ஒன்றே பேராயுதம்** என்பதால் 18.11.2021 வியாழக்கிழமை மற்றும் 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை அனைத்து அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையம் மற்றும் 534 சிறப்பு முகாம்களும், மற்றும் (Mobile Vaccination Team) வீடுவீடாக சென்று 20,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதை இலக்காக கொண்டு **"மெகா தடுப்பூசி முகாம்"** நடைபெறவுள்ளது.

மேலும், முதல் தவணை தடுப்பூசி செலுத்தி கொள்ளாதவர்கள் மற்றும் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளவுள்ள நபர்கள் தானாக முன்வந்து தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப. அவர்கள் அன்புடன் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**